11.09.2024

O.S.No.173/2016

**பி**.வா.சா.1.திரு.சௌந்திர பாண்டியன் த.பெ.கருப்பையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். நான் பிறந்து, வளர்ந்தது எல்லாம் இரணியம் கிராமம் சுந்தரராஜன் பட்டி என்றால் சரிதான். வாதிகளும், எனது உறவினர்கள் என்றால் சரிதான், நாங்கள் ஒரே பகுதியில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த ஊரில் குடியிருக்கும் அத்தனை நபர்களுக்கும் கிரைய ஆவணம் இருக்க வாய்ப்பில்லை என்றாலும், சிலருக்கு அனுபவ அடிப்படையில் சொத்தில் உரிமை இருக்கும் என்றாலும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 6ம் பிரதிவாதிதான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். எனது மைத்துனர் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவர் என்ன படித்துள்ளார் என்றால் அதை அவரைதான் கேட்க வேண்டும் என சாட்சி கூறுகிறார். 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. தாவா எந்த சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சர்வே எண்.33/3க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராது சர்வே எண்.33/3-க்காக தாக்கல் செய்யப்பட்ட பிராது அல்ல என்றாலும், உட்பிரிவு இல்லாமல் சர்வே எண்.33 என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்கு எல்லைகள் என்னவாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண்.33ல் உள்ள மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 7ஏக்கருககு மேல் இருந்தது, தற்போது அவை எல்லாம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு சர்வே எண்.33க்கான நான்குமாலை வைத்துதான் அந்த சொத்தின் மொத்த விஸ்தீரத்தினை அடையாளம் காட்ட முடியும் என்றால் சரிதான். அதே போல் தனிநபர் அனுபவித்து வரும் மாட்டுக்கொட்டம், வீடு ஆகியவற்றிற்கும் நான்குமாலை வைத்துதான் அடையாளம்காண முடியும் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ-6 புல வரைபடம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் 27.01.2008 அன்று கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது 2016 என்றால் சரிதான். மேற்படி ஆவணம் மிக பழமையான தாளாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் FMB பதிவேட்டிலிருந்து நகல் எடுக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி FMBல் காணப்படும் அனைத்து சொத்துக்களுக்கும் கூட்டு அடங்கல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-6ல் 33/6 என்பது பாதை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-4 பட்டா சர்வே எண்.33/6 க்கானது என்றால் சரியல்ல, பி.வா.சா.ஆ-6 ஏற்படுவதற்கு முன்பே பி.வா.சா.ஆ-4 வழங்கப்பட்டுள்ளது, அதற்கான பட்டா அது அல்ல.

பி.வா.சா.ஆ-4ல் சர்வே எண்.33/6 என காணப்படுகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-4ல் கண்டுள்ள பெரியசாமிக்கோன் யார் என்றால் 6ம் பிரதிவாதி தவமணியின் தந்தை ஆவார். பி.வா.சா.ஆ-4ல் கண்டுள்ள பெரியசாமியும், 2ம் பிரதிவாதியான சி.பெரியசாமியும் ஒரே நபர் என்றால் சரியல்ல.

4. வாதியின் தாயார் பாப்பாத்தி அம்மாள் 1946, 1950 ஆகிய வருடங்களில் கிரையம் பெற்ற 448-1/2 சதுர அடியைப் பொறுத்து எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அதே போல் வா.சா.ஆ-3 ஆவணமானது வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 கிரைய பத்திரத்திற்கு சம்மதம் தெரிவித்து எழுதிக்கொடுத்த ஆவணம் என்றாலும், அதை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ-6ல் கண்டுள்ள சர்வே எண்.33/7 மற்றும் சர்வே எண்.33/10 கிழமேல தெருவுக்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.33/7 தங்கம் என்ற முத்துகருப்பன், தவமணி என்று முத்துலிங்கம், மூர்த்தி என்ற பெரியண்ணன் ஆகியோர்களது பெயரில் உள்ளது. அதற்கான அடங்கல்தான் பி.வா.சா.ஆ-1 என்றால் சரிதான். சர்வே எண்.33/7க்கும் தாவா இடத்திற்கும், எனக்கும் தாவா இல்லை என்றால் சரிதான். அதே போல் பி.வா.சா.ஆ-3 ஆவணம்சர்வே எண்.33/10க்கான அடங்கல் என்றால் சரிதான். அந்த சொத்திற்கும், வாதிகளுக்கும் தாவா இல்லை என்றால் சரிதான்.

5. அதே போல் சர்வே எண்.33/6 தெரு என்றால் சரிதான். அதை பொறுத்து எங்களுக்கும், வாதிக்கும் இடையே தாவா இல்லை என்றால் சரிதான். அதே போல் சர்வே எண்.33/4ம் சர்வே எண்.33/3ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.33/3ல் மேல்புறம் 7 அடி பாதை இருந்தது, அதனையும் சேர்த்து உட்பிரிவு செய்துவிட்டார்கள். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்று நான் இதுவரை முறையிட்டதில்லை என்றால் சரிதான். அவ்வாறு தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-1 முதல் பி.வா.சா.ஆ-6 வரையான ஆவணங்கள் தற்போது நடைமுறையில் இல்லை என்பதால்தான் சர்வே எண்.33க்கான கூட்டு அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 ஆவணம் இந்த வழகக்கு நிலுவையில் இருந்த போது பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், அதற்கு முந்தைய ஆவணம் உள்ளது. அதில் விஸ்தீரணம் சர்வே எண்.33/2க்கு 81 சதுர மீட்டர் காட்டப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வெள்ளைதாயிக்கு 40 சதுர மீட்டர்தான் என பட்டா எண்.1994 என தற்போது அரசு ஆவணங்களில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது தவறானது.

6. பி.வா.சா.ஆ-6 ஆவணத்தில் காணப்படும் சர்வே எண்.33/2 ல் எவ்வளவு விஸ்தீரணம் காணப்டுகிறது என்றால் 81 சதுரமீட்டர் காணப்படுகிறது. சர்வே எண்.33/2ல் அதிக விஸ்தீரணத்திற்கு பட்டா பெற்று, அதன் அடிப்படையில் வாதியின் சொத்தான சர்வே எண்.33/3க்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. உண்மையான தாவா சர்வே எண்.33/2 மற்றும் 33/3 ஐ பொறுத்துதான் என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்ததாலும், கிராம வருவாய் கணக்குகளை கையாள்வதில் திறமையானவர் என்பதாலும், சர்வே எண்.33/2 ஐ பொறுத்து தவறான பட்டாவை அதிக விஸ்தீரணத்தினை பெற்று வாதியின் சொத்திற்கு இடையுறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

தாவாசொத்திற்கும் எங்களுக்கும் யாதொரு பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.